தெரிவித்திருக்கின்றேன். 'இந்தப் பிரச்சினைக்கு உடனே தீர்வு காணுங்கள்' என்று சொல்லியிருக்கின்றேன். இதுகுறித்து ஏற்கெனவே, கேள்வி நேரத்தில் நான் பேசுகின்றபோது, இந்தக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், நானே நேரடியாக கன்னியாகுமரி மாவட்டத்திற்குச் சென்று, தொய்வு ஏற்பட்டுள்ள பணிகளையெல்லாம் விரைந்து செய்வதற்கு முடிவு செய்திருக்கின்றேன் என்று கூறியிருந்தேன். இந்தப் பணிகளையும் இணைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் உடனே அவர்களை அழைத்து settlement-க்கு என்ன செய்ய முடியுமோ அதைச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2023 ஏப்ரல் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, இதை அறிமுகம்தானே செய்கிறோம். (குறுக்கீடு) பதிவு செய்யுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவு நல்ல சட்டமுன்வடிவு, அதை நான் ஆதரிக்கிறேன். அதிலே ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனியாக ஓய்வறை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது* debate *இல்லை, ஆய்வுக்கு வரும் நாளில் பேசலாம். இது அறிமுகம்தான். அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறேன் என ஒரே வார்த்தை சொல்லிவிட்டு உட்காருங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆதரிக்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று கூறுங்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *நான் எதிர்க்கவில்லை. சட்டமுன்வடிவில் திருத்தம்தான் கேட்கிறேன், சட்டத்தை ஆதரிக்கிறேன். ஆண்களுக்கும் பெண்களுக்கும் தனியாக ஓய்வறை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைச் சட்டமுன்வடிவை ஆய்வு செய்யும்போது சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் திருத்தத்தை முன்மொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*